வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி 30.10.2025 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- உலகின் முக்கிய கடல்சார் சக்தியாக, இந்தியா மேம்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று குஜராத் மாநிலம் ஏக்தா நகரில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.
- பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தி மற்றும் குருபூஜை தினமான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார்.
- பாரம்பரியம்-நவீனம் இரண்டையும் இணைக்கும் வகையிலான சிறப்பு ஏற்றுமதிக் கேந்திரமாக, புதுச்சேரியை மேம்படுத்த முடியும் என்று, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.

------------------------------

<u>மோடி கடல்சார் (13)</u>

இந்தியா, கடல்வழி தொடர்புகளை மட்டுமின்றி, பல்வேறு மதிப்பு கூடுதல் சேவைகள், பசுமைக் கப்பல் திட்டங்கள், மற்றும், தொழில் துறையினருக்கு உகந்த கொள்கைகளையும் வழங்குவதன் மூலம், உலகின் முக்கிய கடல்சார் சக்தியாக மேம்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். உலகின் முக்கிய கடல்வழிப் பாதைகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள இந்தியாவில், நீண்ட கடற்கரை மற்றும் உலகத் தரம் வாய்ந்த துறைமுகங்களும் இருப்பதால், இந்தியாவின் கடல்சார் வளர்ச்சிப் பயணத்தில், முதலீட்டாளர்களுக்கு இன்னும் பல வாய்ப்புகள் இருப்பதாக இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர்

தெரிவித்துள்ளார். கப்பல் கட்டுமானம், துறைமுக செயல்பாடுகள், சரக்குப் போக்குவரத்து, மற்றும், கடல் வர்த்தகம் சார்ந்த பல்வேறு துறைகளில், புதிதாக திறக்கப்படும் முக்கிய வாய்ப்புகளை, முதலீட்டாளர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று, பிரதமர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

<u>மோடி குஜராத் 1 (18)</u>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று முதல், குஜராத் மாநிலத்தில், 2 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார். இன்று, ஏக்தா நகரில் நடைபெறும் விழாவில், மொத்தம் ஆயிரத்து 140 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அவர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். குஜராத்தில் பிரதமர் தொடக்கி வைக்கும் திட்டங்களில், ராஜ்பிப்லா-வில் நிறுவப்பட்டுள்ள பீர்சா முண்டா பழங்குடி பல்கலைக்கழகம், குருதேஷ்வர் பகுதியை, விருந்தோம்பல் மாவட்டமாக மேம்படுத்தும் திட்டம், வாமன் விருக்க்ஷா வாட்டிகா என்னும் குள்ளமரத் தோட்டம் ஆகியன அடங்கும். 25 மின்சார பேருந்துகள், மற்றும், இப்பேருந்துகளுக்கான சார்ஜிங் மையத்தையும் பிரதமர் தொடக்கி வைக்கிறார். குஜராத்தில், இந்திய சாம்ராஜ்யங்கள் குறித்த அருங்காட்சியகம், மற்றும், விளையாட்டு வளாகம் அமைக்கும் பணிகளுக்கும், ஒற்றுமை சிலை வளாகத்தில் கிடைநிலை நகரும் தளம் அமைக்கும் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார். சர்தார் பட்டேலின் 150ஆவது பிறந்த ஆண்டை குறிக்கும் வகையில், 150 ரூபாய் முக மதிப்புள்ள நினைவு நாணயத்தையும் பிரதமர் வெளியிடுகிறார்.

நாளை சர்தார் பட்டேல் பிறந்தநாளன்று, தேசிய ஒற்றுமை தின கொண்டாட்டங்களில், பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொள்கிறார்.

மோடி குஜராத் 2 (5)

ஒற்றுமை தின உறுதிமொழி ஏற்பிலும், ஒற்றுமை தின அணிவகுப்பிலும், அவர் பங்கேற்கிறார். புகழ்பெற்ற இந்திய நாய் ரகங்களை கொண்டு, எல்லைப் பாதுகாப்புப் படையினரால் பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட மோப்ப நாய் படையின் அணிவகுப்பு, ஒற்றுமை தினப் பேரணியில், முக்கிய அம்சமாக இடம்பெற உள்ளது.

மோடி-குஜராத் 3 (13)

ஆண்டுதோறும் புதுடெல்லியில் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பை போல, ஆண்டுதோறும், அக்டோபர் 31ஆம் தேதி, சர்தார் பட்டேல் பிறந்த நாளன்று, குஜராத் மாநிலம் ஏக்தா நகரில், ஒற்றுமை தின அணிவகுப்பு நடைபெறும் என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார். இன்று பட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இவ்வாண்டு ஒற்றுமை தின ஓட்டங்கள், ஒவ்வொரு மாநிலம், மாவட்டம், பல்கலைக்கழகம், மற்றும், பள்ளி அளவில், விரிவான முறையில் நடத்தப்படும் என்றார்.

பழங்குடித் தலைவர் பீர்சா முண்டா பிறந்த நாளை குறிக்கும் வகையில், நவம்பர் 1 முதல் 15ஆம் தேதி வரை, ஏக்தா நகரில், பாரத் பர்வ் விழா நடைபெறும் என்றும், இதன் கடைசி நாளான பழங்குடியினர் கவுரவ தினத்தன்று, பழங்குடிக் கலை-கலாச்சாரத்தைப் போற்றும் வகையில், சிறப்பு கொண்டாட்டங்கள் இடம்பெறும் என்றும், திரு. அமித் ஷா தெரிவித்தார்.

------------------------------

ஜிஎஸ்டி-சத்தீஸ்கர் 1 (5)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது.

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், சத்தீஸ்கரில், பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெறுகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி – சத்தீஸ்கர் 2* (17)

(வாய்ஸ்)

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், சத்தீஸ்கரில், குறிப்பாக, கைத்தறி, சிமெண்ட் உற்பத்தி ஆகிய துறைகளுக்கு, முக்கிய பலன்கள் கிடைத்துள்ளது. கைத்தறி துறை மீதான ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், சத்தீஸ்கர் மாநிலத்தில் தயாராகும், புகழ்பெற்ற டஸ்சர் சில்க் துணி வகைகளின் விலை குறைந்து, சர்வதேச சந்தையில் இத்தகைய துணி வகைகளின் போட்டித் திறன் வலுப்பெற்றுள்ளது. மாநிலத்தில் இத்துறையில் ஈடுபட்டுள்ள சுமார் ஒன்றரை லட்சம் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரம் இதனால் மேம்பட்டுள்ளது. சிமெண்ட் மீதான ஜிஎஸ்டி, 28 சதவிகித வரி அடுக்கில் இருந்து, 18 சதவிகித வரி அடுக்கிற்கு மாற்றப் பட்டுள்ளதால், சிமெண்ட் விலையும், கட்டுமான செலவுகளும் குறைந்து, வீட்டு வசதித் துறையில் தேவை அதிகரித்து, கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாகி வருகின்றன. பாரம்பரியத் தொழில்களை பாதுகாக்கும் அதே வேளை, புதிய தொழில்களையும் ஊக்குவித்து, சத்தீஸ்கரில் மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவதிலும், அனைவரையும் உள்ளடக்கிய சமூக பொருளாதார வளர்ச்சியை தூண்டுவதிலும், அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் உதவிகரமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

-----------------------------

மோடி பசும்பொன் (10)

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தி மற்றும் குருபூஜை தினமான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். இந்தியாவின் சமூக-அரசியல் வாழ்க்கையில், ஆழமான தாக்கம் ஏற்படுத்திய மாபெரும் தலைவர் தேவர்ஜி என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகப் பதிவில் இன்று கூறியுள்ளார். சமூக சேவையுடன், ஆன்மீகத்தை ஒருங்கிணைத்து, ஒற்றுமை, கண்ணியம், மற்றும், சுயமரியாதைக்கு போராடிய பசும் பொன் முத்துராமலிங்க தேவர், நீதி, சமத்துவம், மற்றும், ஏழைகளின் நலன் மீது வைத்திருந்த அசையாத உறுதிப்பாட்டினால், தொடர்ந்து பல தலைமுறைகள் ஊக்கம் பெற்று வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

------------------------------

புதுச்சேரி ஏற்றுமதி 1 (19)

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சகத்தின் ஆதரவுடன், இந்திய ஏற்றுமதியாளர் சங்க கூட்டமைப்பும், பிப்டிக் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள, 2 நாள் சர்வதேச வாங்குவோர்-விற்போர் சந்திப்பு, புதுச்சேரியில், இன்று தொடங்கி உள்ளது. துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டு இதை தொடக்கி வைத்தார்.

2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய இந்தியா என்னும் இலக்கை எட்ட, இத்தகைய நிகழ்வுகள் உதவிகரமாக இருக்கும் என்று அவர் தமது உரையில் கூறினார். சுடுமண் சிற்பங்கள், வேளாண்சார் பொருட்கள் போன்ற துறைகளில் ஆற்றல் பெற்றுத் திகழும் புதுச்சேரியை, பாரம்பரியம்-நவீனம் இரண்டையும் இணைக்கும் வகையிலான சிறப்பு ஏற்றுமதிக் கேந்திரமாக மேம்படுத்த முடியும் என்று அவர் தெரிவித்தார். புதுச்சேரியில், அதிக வேலை வாய்ப்புகளுடன் கூடிய பொருளாதார

வளர்ச்சியை உறுதிப்படுத்த, தேவையான ஆதரவை, அரசு வழங்கும் என்றும், துணை நிலை ஆளுநர் உறுதி அளித்தார்.

மாநில தொழில்-வணிக அமைச்சர் திரு. நமச்சிவாயம் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், எளிய முறையிலான ஒற்றைச் சாளர அனுமதி உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலம், புதுச்சேரியின் தொழிற் சூழலை, அரசு, வலுப்படுத்தி வருவதாக கூறினார். இந்த

<u>புதுச்சேரி ஏற்றுமதி 2 (4)</u>

புதுச்சேரி ஏற்றுமதி வாங்குவோர் -விற்போர் சந்திப்பு, உலக அளவிலான வர்த்தக சமூகத்திற்கு, புதுச்சேரியின் ஆற்றல் மீதுள்ள நம்பிக்கையை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். அமைச்சர் திரு.

------------------------------

<u>புதுச்சேரி ஏற்றுமதி 3 (6)</u>

புதுச்சேரியில் நடைபெறும் இந்த 2 நாள் சர்வதேச வாங்குவோர்-விற்போர் சந்திப்பில்,

-16க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, வெளிநாட்டு வாங்குவோர்,

-புதுச்சேரியைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள்,

-சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்,

-ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள்,

-ஜவுளி, தோல், மற்றும் மருந்து உற்பத்தித் துறையினர், மற்றும்,

-கைவினை கலைஞர்களும் பங்கேற்றுள்ளனர்.

------------------------------

*தேவர்-ராதாகிருஷ்ணன் (7)*

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று, ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில், முத்துராமலிங்க தேவர் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். தேவர் ஜெயந்தி மற்றும் குருபூஜை தினத்தை ஒட்டி, தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு சட்டமன்ற எதிர் கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், பசும்பென் முத்துராம தேவர் சிலைக்கு, மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர்.

-------------------------------

*கடல்சார் வாரம் 1 (12)*

மேற்கத்திய நாட்டினர் இந்தியாவிற்கு கடல்வழி கண்டுபிடிப்பதற்கு பலகாலம் முன்பிருந்தே, உலகின் பல்வேறு பகுதிகளுடன், கடல்வழி வர்த்தக தொடர்பு வைத்திருந்த நாடு, இந்தியா என்று, மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார். மும்பையில் நடைபெறும் கடல்சார் வார விழாவில், கடல்சார் மனிதவளம் என்ற தலைப்பில் இன்று நடைபெற்ற அமர்வில் உரையாற்றிய அவர், கடல்சார் துறையில் அமிர்தகால வளர்ச்சியை எட்டுவதில், நாடு, தன் பாரம்பரிய விவேகத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுதல் அவசியம் என்றார்.

உலகின் மொத்த கடல்சார் மனிதவளத்தில், இந்தியாவின் பங்கு, 2030ஆம் ஆண்டிற்குள், 20 சதவிகிதமாக அதிகரிக்கும் என்று, மத்திய அரசின் கப்பல் துறை இயக்குநர், இந்நிகழ்ச்சியின் போது தெரிவித்தார்.

-------------------------------

வானிலை (8)

கிழக்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, நவம்பர் 5ஆம் தேதி வரை, தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மத்திய கிழக்கு அரபிக் கடலில் நிலவும் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், அடுத்த 36 மணி நேரத்திற்கு, இப்பகுதி வழியாகவே வடக்கு-வடமேற்கு திசையில் நகரக் கூடும் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கோவை மாவட்டம் சின்னக்கல்லாரில், 6 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------------

*மகளிர் கிரிக்கெட் (5)*

உலகக் கோப்பைக்கான ஐசிசி மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டித் தொடரில், இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே, நவிமும்பையில் இன்று நடைபெறும் 2ஆவது அரையிறுதிப் போட்டியில், டாஸ் ஜெயித்து முதலில் ஆடும் ஆஸ்திரேலிய அணி, சற்று முன்வரை, ---- ஓவர்களில், ----- விக்கெட் இழப்பிற்கு, ---- ரன் எடுத்து இருந்தது.

------------------------------

ரிஜிஜூ (12)

டிஜிட்டல் இண்டியா திட்டத்தின் கீழ், ஜனநாயகத்தின் தூண்களான, சட்டமியற்றும் துறை, நீதித் துறை, நிர்வாகத் துறை ஆகிய மூன்றும், டிஜிட்டல் மயமாக்கப் படுவதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார். அனைத்து சட்டமியற்றும் அமைப்புகளுக்கான, NeVA என்னும் தேசிய இ-விதான் செயலியின் முழுமையான அமலாக்கம் குறித்து, அமைச்சகம் சார்பில், இன்று புதுடெல்லியில் நடைபெற்ற இ-விதான் மாநாட்டில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டினால்,

அனுகூலமான, பல்வேறு பலன்கள் ஏற்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். நாடாளுமன்ற விவகாரங்கள் துறை செயலர் திரு. பிகாரி லால், மற்றும், பல்வேறு மாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்களின் சட்டப் பேரவை செயலர்கள், இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

-------------------------------